பராமரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது உண்மையா என்று தங்கள்மூலமாக அமைச்சரிடமிருந்து விடை பெற நான் கருதுகின்றேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் கொடுங்கையூரில் இரு முறை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை சென்னை பெட்ரோலிய சுத்திகரிப்பு நிலையத்திற்கும், சென்னை உரத் தொழிற்சாலைக்கும் மற்றும் சுத்திகரிக்கப்படாத கழிவுநீரை மின் உற்பத்தி நிலையத்திற்கும் மறு உபயோகத்திற்கு விநியோகிக்கப்படுகிறது. அப்படி விநியோகிக்கின்ற நேரத்தில் மாநகராட்சிமூலமாக சிறிது சிறிதாக அமைக்கப்பட்ட பூங்காவிற்கும் இப்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 173, திரு. தி. வேல் முருகன், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

173—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***43182—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, மேல்மாம்பட்டு, மந்தைப்பேட்டையில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, மேல்மாம்பட்டு ஊராட்சியிலுள்ள மேல்மாம்பட்டு குடியிருப்பின் ஒரு பகுதி மந்தைப்பேட்டை ஆகும். மந்தைப்பேட்டை பகுதி மேடான இடத்தில் அமைந்துள்ளபோதிலும், அங்கு தனி ஆழ்துளைக் கிணறு அமைத்து, மின்னிறைப்பான்மூலம் நேரிடையாக போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் கருத்துரு பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2005 மார்ச் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை. டாக்டர் ஆர். கோவிந்தசாமி.

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்மாம்பட்டு கிராமம் ஏறக்குறைய 2 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட கிராமம். நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து 30 ஆண்டுகளுக்கு மேலாகி அந்தத் தொட்டி இடிந்துவிழும் நிலையிலும், அவ்வப்போது தண்ணீர் வருவதால் leak ஆகிக்கொண்டேயும் இருக்கிறது. பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடையாது. அதனால் தொற்று நோய்கள் வருகின்றன. காலரா, டைபாய்ட் போன்ற தொற்று நோய்கள் வருகின்றன. மீண்டும் புதிய நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல, அந்தப் பகுதியிலே மக்கள் தொகை 2 ஆயிரமல்ல. கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஒன்றியத்தைச் சார்ந்த மேல்மாம்பட்டு ஊராட்சிக்கு உட்பட்ட மேல்மாம்பட்டு குடியிருப்பின் ஒரு பகுதி மந்தைப்பேட்டை ஆகும். மேல்மாம்பட்டு குடியிருப்பின் மக்கள் தொகை 2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 1,011. அதில் மந்தைப்பேட்டை பகுதியில் மட்டும் 600 பேர்தான் வசிக்கின்றார்கள். அங்கே தேவையான அளவிற்குச் சுத்தமான தண்ணீர் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும், உறுப்பினர் கூறியதுபோல அங்கே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியானது கட்டப்பட்டு நீண்ட காலமாகவில்லை, கட்டி 10 ஆண்டுகளுக்குள்ளான 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட அந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியானது, மக்கள் பயன்பாட்டிலே இருக்கிறது என்பதையும், ஒரு நாளைக்கு அங்கே தேவைப்படுகின்ற 40 ஆயிரம் லிட்டர் தண்ணீர் மக்களுக்கு வழங்கப்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஆர். கோவிந்தசாமி.

டாக்டர் ஆர். கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொட்டி பழுதடைந்துள்ளது, விரிசல் அடைந்துள்ளது. மீண்டும் அந்தப் பகுதிக்காவது புதிய தொட்டி அமைத்து, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல, அந்தப் பகுதியிலே அந்தத் தொட்டி பழுதடையவில்லை. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 174, 175 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா எண் 176, திரு. ந. கணபதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

176—

ஆரம்பச் சுகாதார நிலையம்

***38715—திரு. ந. கணபதி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வானூர் தொகுதி, நானாக்கால்மேடு கிராமத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், வானூர் ஊராட்சி ஒன்றியம், நானாக்கால்மேடு கிராமத்தில் புதிய ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

திரு. ந. கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களை வணங்கி, எனது வானூர் தொகுதிக்குட்பட்ட நானாக்கால்மேடு என்ற கிராமத்தில் மக்கள் தொகை சுமார் 5,000 உள்ளது. இதைச் சுற்றி உள்ள குக்கிராமங்கள், கிளாப்பாக்கம், தலைகானிகுப்பம், காயல்மேடு, வங்காரம், காரட்டை, சித்தலப்பாக்கம், அரவடை, செட்டிச்சாவடி, கோமடிபட்டு, ஓபிப்பூர், வண்டிப்பாளையம், சொரப்பட்டில் வசிக்கும் மக்கள் மருத்துவ வசதிக்காக ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து தருவாரா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.